மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (06.09.2024), சென்னை, தேனாம்பேட்டை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்ககத்தில் உள்ள மாநில பொது சுகாதார ஆய்வகத்தில், தேசிய அயோடின் பற்றாக்குறை குறைபாடுகள் தடுப்புத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு உட்பட 8 மாநிலங்களில் பணிபுரியும் ஆய்வக நுட்புநர்களுக்கு 4 நாட்கள் பயிற்சி பாசறை நிறைவு விழாவில், ஆய்வகத்தை பார்வையிட்டு, ஆய்வக நுட்புனர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி, ஆய்வக கையேட்டினை வெளியிட்டு, விழா பேரூரையாற்றினார். இந்நிகழ்வில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர் மரு.விஜயலட்சுமி, மரு.சம்பத், இணை இயக்குநர் மரு.சண்முகசுந்தரம், துணை இயக்குநர் மரு.ராஜா, ஓய்வு பெற்ற எய்ம்ஸ் பேராசிரியர் பத்மஸ்ரீ மரு.காட்போலே (Dr.Godbole), புதுடெல்லி, நியூட்ரிஷன் இன்டர்நேஷனல் தன்னார்வ அமைப்பின் திட்ட அலுவலர் ரஞ்சன் ஜா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தியாகிகளின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும்

மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் ரூ.11,500 ஆக உயர்வு!

அரசாணை வெளியிட்டது தமிழக அரசு!

சென்னை,செப்.7- விடுதலைப் போராட்ட வீரர்கள், விடுதலைப் போராட்டத் தியாகிகளின் குடும்பங்களுக்கு வழங்கப் பட்டு வரும் ஓய்வூதியத்தை உயர்த்தி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது சுதந்திர தின உரையில், தியாகிகள் குடும்பங்களுக்குப் பயனளிக்கும் வகையில் சில அறிவிப்புகளை வெளியிட்டார். இந்த அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் படி, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு தற்போது வழங்கிவரும் மாதாந்திர ஓய்வூதியத்தை 20 ஆயிரத்திலிருந்து 21 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கவும் உத்தரவிட்டார்.

விடுதலைப் போராட்டத் தியாகிகளின் குடும்பங்களுக்கு தற்போது வழங்கிவரும் மாதாந்திரக் குடும்ப ஓய்வூதியத்தை 11 ஆயிரம் ரூபாயிலிருந்து 11 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதற்காக, கூடுதல் செலவீனமாக 29.55 லட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இதுபோன்று, வீரபாண்டிய கட்டபொம்மன், சிவகங்கை மருது சகோதரர்கள், இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதி, வ.உ. சிதம்பரனார் ஆகியோரின் வழித்தோன்றல்கள் பெற்றுவரும் மாதாந்திரச் சிறப்பு ஓய்வூதியத்தை 10 ஆயிரம் ரூபாயில் இருந்து 10 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதற்காக, கூடுதல் செலவீனமாக 5.55 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் -தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - பாலவாக்கம் த. விஸ்வநாதன் பங்கேற்பு

வேளச்சேரி மேற்குப் பகுதி வட்டசெயல்வீரர்கள் கூட்டங்கள்!

பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர் அறிவிப்பு!

சென்னை, செப். 7 - வேளச்சேரி மேற்கு பகுதியில் அடங்கிய வட்ட கழகங்களின் செயல் வீரர்கள் மற்றும் பொது உறுப்பினர் கூட்டம் கீழ்கண்ட நாட்களில் நடைபெறுகிறது என்று பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர் அறிவித்துள்ளார்.

இக்கூட்டங்களில் சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரையாற்றுகிறார். மேலும் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மாவட்ட துணை செயலாளர் / தொகுதி ற்பார்வையாளர் பாலவாக்கம் த. விஸ்வநாதன் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்கி பேசுகின்றனர்.

கூட்டம் நடைபெறும் விவரம் வருமாறு

175 அ வட்டம், 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்க வட்டச் செயலாளர் வி.சக்திவேல் தலைமையில் வேளச்சேரி மேற்கு. டாக்டர் அம்பேத்கார் நகர், 22 வது குறுக்கு தெரு, திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது,

176 அ வட்டம், தலைமை வட்டச் செயலாளர் கே.என் தாமோதரன், இடம் 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 03.30 மணி, எண்.61எஃப், வேளச்சேரி மெயின் ரோடு, பகுதி கழக அலுவலகம்.

177 அ வட்டம், 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி, தலைமை வட்டச் செயலாளர் ஜி.பி.எஸ்.பாலசதீஷ், எஸ்.டி.வி மஹால், ராயல் ஷாப்பி அருகில், 2வது தெரு, டான்சி நகர், வேளச்சேரி.

178 அ வட்டம், வட்டச் செயலாளர் தே.கோபி, 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணி ஈவான்ஸ் மேல் நிலை பள்ளி, மாரியம்மன் கோவில் தெரு, தரமணி, சென்னை - 600 113.

176-வது வட்டம், தலைமை வட்டச் செயலாளர் எஸ்.முருகவேல், 09.09.2024 திங்கள் கிழமை காலை 11.00 மணி, 3வது தெரு, ராதா நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.

175-வது வட்டம், வட்டச் செயலாளர் க.பாரதிதாசன், 09.09.2024 திங்கள்கிழமை, மாலை 5.00 மணி , கலைஞர் படிப்பகம், அண்ணா தெரு, நேரு நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.

177 -வது வட்டம், வட்டச் செயலாளர் பொ.த.மதிவாணன், அ 9.9.2024 திங்கள்கிழமை இரவு 7 மணி, கபாலி திருமண மண்டபம், காந்தி சாலை, வேளச்சேரி, சென்னை - 600 042.

.178-வது வட்டம், வட்டச் செயலாளர் த.பார்த்திபன், காலை 8.00 மணி எஸ்.வி.எஸ் மஹால், 100 அடி சாலை, தரமணி, சென்னை - 600 113.

நடைபெறும் கூட்டத்திற்கு உள்ள மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அந்தந்த வட்டக்கழகங்களில் உள்ள மாவட்ட துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முண்ணோடிகள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், மன்ற செயலாளர்கள், வட்ட இளைஞர் அணி தகவல் தொழில் நுட்ப அணி மற்றும் மகளிர் அணியின் நிர்வாகிகள், வட்டத்தில் உள்ள கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வேளச்சேரி மேற்குப் பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர் அறிவித்துள்ளார்.

டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

குன்றத்தூர் நகரக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப். 7 - குன்றத்தூர் நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் நகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 9.9.2024 - திங்கள் கிழமை மாலை 3 மணியளவில் குன்றத்தூர் சுமதி மஹாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு எம். சங்கர் தலைமை வகிக்கிறார். நான் (நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி) வரவேற்கிறேன்.

ஏ.கோதண்டம், டி.கே. குமாரசாமி, அ.தமிழ் மாறன், டி.எஸ்.கலைச் செல்வன், டி. திருநாவுக்கரசு, என்.குணசேகர், க. வே.சிதம்பரம், ஜெ.மணி மாறன், ஆர்.கே.அனிபுன் னிசா, த.கந்தசாமி, என். கருணாநிதி, டி.என். அருண்மொழி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

2026 சட்டமன்றத் தேர்தல், முப்பெரும் விழா, கழக வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசிக்கப்படும்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா. மோ.அன்பரசன், ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், பொன். ரமேஷ் கவி ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

இக்கூட்டத்தில் கே.கே. இராசமாணிக்கம், செந்தில் குமார், ஜி.பாபு, என். பழனி, தி.வே.நமச்சிவாயம், எம்.குப்புசாமி, ஜெ.முனுசாமி, டி.வி.சரவணன், கே.எஸ்.ராஜி, ஆர். கே.சையத்யூசப், ப.தீனதயாளன், ம.ஹரி, எம்.பக்தவச்சலம், ஜெ.தயாளன், இ. பலராமன், எம்.உமாபதி, கே.வஜ்ஜிரவேல், டி.காசிநாதன், கே.நாகேந்திரன், சி.பாபு, , இ.முத்து, எஸ்.சந்துரு எம்.சி., இ.லோகநாதன், கு.தாமோதரன், பி. சத்தியமூர்த்தி, திருமலை, எம்., என்.சுந்தர், ஜெ.சங்கர், ஆர்.வி.விஜயகுமார், கே.பாளையம், எஸ்.ரங்கராஜ், கே.தங்கராஜ், எஸ். கண்ணப்பன், டி.எஸ்.தண்டபாணி, ஆர்.பார்த்தசாரதி, ஆர்.ரவிச்சந்திரன், கே.ரங்கன்,

டி.ராஜேந்திரன், கே.ரஞ்சித்குமார், என்.தனபால், பி.சுரேஷ், எம்.பி. மணி, இ.தியாகு, எஸ்.முருகன், எம்.சுரேஷ், டி. ரமேஷ், பி.ராஜேந்திரன், எஸ்.சீனு, இரா.வேலாயுதம், எஸ்.கதிரவன், ஜெ. மணிமாறன், கே.என்.சசிகுமார், டி.கந்தன், எம்.மாரிமுத்து, கே.ரவிச்சந்திரன், இரா.பிரேம்குமார், ஏ. செல்வராஜ், வி.சாரங்கபாணி, சி. சந்தானம், டி. செல்வராஜ், டி.சுந்தர்ராஜன், டி.இம்மானு வேல், ஜெபகுமார், கே. சிவகுமார், ஏ.ஜெயகுமார், எம். கே.முருகன், ஜெ.நித்தியராமன் உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர்.

ஆர்.கே.டில்லிபாபு நன்றி கூறுகிறார்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆர்.டி சேகர் எம்.எல்.ஏ., சிறப்புரை! டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஏ.சரவணன் பங்கேற்பு!

பெரம்பூர் தெற்கு - 45 (அ) - 46 - 45 -வது வட்டங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

கே. தினகரன் - வி.முருகன் - ஜி மாரிமுத்து தலைமை! க.ஜெயராமன் அறிவிப்பு!

சென்னை,செப்.7- கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதியில் உள்ள 45 (அ) 46 மற்றும் 45 வட்டங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பின்வரும் விவரம் படி நடைபெறுகிறது.

இதில் மாவட்டபொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

இக்கூட்டத்தில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, தொகுதி பொறுப்பாளர் ஏ.சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுகின்றனர்.

45 (அ) வட்டம்: தலைமை: வட்ட கழக செயலாளர் கே.தினகரன் முன்னிலை : பகுதி செயலாளர் க.ஜெயராமன் , 08:09:2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணி, இடம் : ராம்ஸ் மாஹால், ஸ்டீபன்ஸன் ரோடு வியாசர்பாடி.

46 வட்டம்: தலைமை வட்டக்கழக செயலாளர் : வி.முருகன் முன்னிலை : பகுதி செயலாளர் க.ஜெயராமன், 08:09:2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணிக்கு இடம்: ஜி.டி மகால் இ .எச்.ரோடு .வியாசர்பாடி

45 வட்டம்: தலைமை வட்டக்கழக செயலாளர் : ஜி மாரிமுத்து முன்னிலை : பகுதி செயலாளர் க.ஜெயராமன், 08:09:2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11:00 மணிக்கு இடம்: எ.பி. மகால் இ .எச்.ரோடு .சர்மா நகர் எஸ்டேட் எதிரில்

மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டங்களில் மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்றஉறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகம் முகவர்கள் , BLA2, BLC, கழகப் பொது உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் இவ்வாறு பகுதி செயலாளர் க.ஜெயராமன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

வட்டச் செயலாளர் கே.என்.தாமோதரன் தலைமையில் சு.சேகர் – என்.ஆனந்தம் முன்னிலையில்

வேளச்சேரி 176 'அ' வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - தமிழச்சி தங்கபாண்டியன் - த.விஸ்வநாதன் சிறப்புரை!

சென்னை, செப். 7 - வேளச்சேரி மேற்கு 176 அ வட்டச் செயலாளர் கே.என்.தாமோதரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு

வேளச்சேரி மேற்குப் பகுதி 176 அ வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (8.9.2024 - ஞாயிறு)) பற்பகல் 3 மணிக்கு வேளச்சேரி பகுதிக் கழக அலுவலகத்தில் எனது வட்ட கழக செயலாளர் கே.என்.தாமோதரன் தலைமையில் நடைபெறுகிறது.

பகுதிச் செயாளர் அரிமா சு.சேகர், விளையாட்டு அணி அமைப்பாளர் வே.ஆனந்தம் எம்.சி. ஆகியோர் முன்லை வகிக்கின்றனர். ஜே.பி.எஸ்.பவளவண்ணன், ஏ.கலைச்செல்வன், ஆர்.கே.குட்டி, எம்.நாகசு.சுந்தர், ஆர்.பழனி, டபிள்யூ.ஹமீத், எஸ்.சுகுமார், ஆர்.செல்வராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், முனைவர் தமிழச்சி தங்கப் பாண்டியன் எம்.பி., வேளச்சேரி தொகுதி ஒருங்கிணைப்பாளர் பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி. ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி., வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி., கழக த.ரமேஷ், த. ஜெகதீசன், முகேஷ், கண்ணா, பகுதி நிர்வாகிகள் சி.பழனி, எம்.ஏ.சங்கர், பொ.த.எழில்வாணன், கே.மைதிலி, ந.டில்லிகுமார், மாவட்ட, பகுதி துணை அமைப்பாளர்கள் பிரபு, போஸ், ப.பழனி, வெல்டிங், ராஜ், ம. விக்னேஷ்வரன், நூர் பாஷா, வி.ராஜசேகர், எஸ். பாலு, இ.நடேஷ்குமார், ஜி.கார்த்திகேயன், வட்ட செயற்குழு உறுப்பினர்கள் டி.ராமலிங்கம், செ. சுப்பிரமணி, சு.பொன்னுசாமி, செ.அருள், வி.ராதா கிருஷ்ணன், வி.ராஜசேகர், செ.முனு சாமி, கே.சிவகுமார், கே.மதன், எம்.சரவணன், ஏ.ரவி, டி.பாலாஜி, எம்.அருணாச்சலம்,

பாகமுகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள் டீசார்லஸ், எம்.தியாகு, கே.கார்த்திகேயன், கே.அஜித்குமார், கே.மகேஷ், எம்.வெங்கடேஷ், கே.லஷ்மி நாராயணன், டி.அழகர், ஏ.சுரேஷ், கே.அயோத்தி, ஆர்.அரசு, எஸ்.ரவி, ஆர்.சரவணன், எஸ்.சீனிவாசன், பி.சரவணன், டி.முருகன், அ.ஆனந்தன், சி.என்.மேகநாதன், ஜே.கே.விஜி, கே.ஜெகதீஷ், ரவி, கே.புவனேஸ்வரன், ஆர்.ஜெகன், ஏ.ஊர்துசாமி, எஸ்.சிவா, எம்.அசோக், ஆவின்ராஜா, பி.ராஜா, ஏ. பாலகிருஷ்ணன், துரை பாண்டி, தினேஷ், லாரிகுமார், தினேஷ்பாபு, சத்தியமூர்த்தி,

சிஷோர்குமார், ராதாகிருஷ்ணன், டி.கஜலட்சுமி, உஷாராணி, காந்தி, தினேஷ், ஆர்.செல்வி, இ.முருகன் , ஆர். சித்தநாதன், எம்.ராமு, ஏ. ஜெய்சன், எம்.ராஜசேகர், கே.மோகன், பி.மனோகர், விஜயராகவன், சுப்பல்மணிவேல், பாலு, ச.ம.அபினேஷ்வரன், அஜித், எம்.விஜயகாந்த், வி.பாலாஜி, வி.கிர்த்திஷ், கங்காதரன், கோபி, சரவணன், ஏ.பிரபு, ஏ.விஜயகுமார், பி.குணசேகரன், எம். அசோக்குமார், எம்.முருகேசன், எஸ்.சிவா, மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

வட்ட துணைச் செயலாளர் எஸ்.அமல்தாஸ் நன்றி கூறுகிறார்.

இக்கூட்டத்தில் வட்ட நிர்வாகிகள், வட்டத்திற்குட்பட்ட அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், செயல்வீரரகள், கழக மகளிர்கள் கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் கே.என்.தாமோதரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர் கூட்டம் ஒன்றிய செயலாளர் ஆ.சத்தியவேல் வரவேற்புரையில் ஒன்றிய அவைத்தலைவர் டி.கே.முனிவேல் தலைமையில் ஒன்றிய நிர்வாகிகள் ஆர்.உதயசூரியன், அன்பு(எ) உதயகுமார், பி.ராஜேஸ்வரி, கே.எஸ்.குப்பன், கே.வி.வெங்கடாசலம், கே.கண்ணபிரான், ஆர்.தணிகசாலம் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் மூப்பெரும் விழா, பொற்கிழி வழங்குதல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலை மற்றும் 2026 தேர்தல் பணிகள் குறித்து சிறப்புரையாற்றினர்;. நிகழ்ச்சியில் மு.பகலவன், பி.ஜெ. மூர்த்தி, மு.கதிரவன், கே.வி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், ஏ.தேவேந்திரன, ஏ.வி. ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், ஜி. ஸ்டாலின், ஒன்றிய செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், ஜான்(எ)பொன்னுசாமி, அணிகளின் அமைப்பாளர்கள் ஜி.சுமன், ஜெயலலிதா அணிகளின் துணைஅமைப்பாளர்கள் ஜி.தியாகராஜன், அக்கரை.ஆர்.ரஞ்சித், எம்.கே.ஆனந்தன், எம்.முனிநாதன், சி.விஜய் பி.கே.நாராயணன், இ.சுரேஷ், பி.கே.பாபு, இளைஞர் அணி வீரமணிகண்டன், சி.தினேஷ், ஆர்.வல்லரசு உள்ளிட்;ட கழக முன்னோடிகள், கிளைச் செயலாளர்கள் பங்கேற்றனர்.

டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம்!

படப்பை ஆ.மனோகரன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப். 7 - குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ. மனோகரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் 9.9.2024 - திங்கள் மாலை 4.30 மணியளவில் சிக்கராய புரத்தில் உள்ள கார்த்திக் பேலஸில் ஒன்றிய அவைத் தலைவர் மு.சுப்பிரமணி தலைமையில் நடை பெறுகிறது.

செப்.15 முப்பெரும் விழா, 2026 சட்டமன்றத் தேர்தல், கழக வளர்ச்சி குறித்து ஆலோசிக்கப்படும். இக்கூட்டத்தில் க.அன்புசெல்வன், சரஸ்வதி மனோகரன், ஏ.வந்தே மாதரம், உமா மகேஷ்வரி வந்தே மாதரம், வ.நந்த கோபால், இ.மணி, வாசுகி மகேஷ், சி. பார்த்தசாரதி, வி.அரி, மு. ராஜேந்திரன், மா.பரிமேலழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் சங்கீதா வேலு, பொன்.ரமேஷ் கவி, எஸ்.கர்ணன், மலர்விழி தமிழ் அமுதன், கு.ஏழுமலை, லட்சுமி ஞானசேகர், ச.பாலகிருஷ்ணன், ஜி.ஏ.ராயப்பன், எஸ். வைரம், தினேஷ், கந்தசாமி, ம.ரேவதி, கே.என்.சி.சத்தியமூர்த்தி, வி.எஸ்.கோதண்டராமன், என்.எஸ்.இளங்கோ, ப. அறிவாளி, லோ.சுதாகர், ரா.தீபக்ராஜ், மா.கே.பிரகாஷ், க.பா.ஆடலரசு, அ.ஜமீர், இரா. குமரவேல், செ.பார்த்திபன், ஆர்.சையத்ரமிஸ், பொன். இளையபாரதி, இ.பாலாஜி, மகாலட்சுமி, எட்டியப்பன், மல்லிகா நடராசன், ஷோபா, ரகுநாதன், ஜி. இருசப்பன், ஏ.இ.பரசு ராமன், ம.அசோக்குமார், ஏ.இ.பஞ்சாட்சரம், ப.வேல்முருகன், ச.ரஞ்சித்குமார், இரா.சந்திரசேகர், மு.குமார், வ.வீரபாண்டியன், ர.தமிழ்தாசன், க.யுவராணி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

இவ்வாறு படப்பை ஆ. மனோகரன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு-தாஸ்புரத்தில்

ரூ.1.58 கோடி மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடிகால் கட்டும் திட்டப் பணி!

இ.பரந்தாமன், எம்.எல்.ஏ, அடிக்கல் நாட்டினார்!

சென்னை,செப்.7- கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு-தாஸ்புரத்தில், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் வழங்கப்பட்ட 1.58 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய மழை நீர் வடிகால் கட்டும் திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

எழும்பூர் தொகுதியில் எடுக்கப்பட்டு வரும் பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, சேத்துப்பட்டு-தாஸ்புரத்தில் இப்புதிய மழைநீர் வடிகால் கட்டும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்வில் சென்னை மாநகராட்சி, மண்டலம்-8-இன் செயற்பொறியாளர் பத்மநாபன், உதவி செயற் பொறியாளர் சுரேஷ் பாபு, 108-வது வட்ட உதவிப் பொறியாளர் மஸ்தானி ஆகியோர் பங்கேற்றனர்.

முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி கமலக் கண்ணன், 108-வது வட்டத் துணைச் செயலாளர்கள் கே.சீனிவாசன், ஜெ.இந்திரா காந்தி; எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்பரசன், 108-வது வட்ட இளைஞரணி அணி அமைப்பாளர் பு. சதிஷ்குமார், எழும்பூர் தெற்குப் பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் அ.குருமூர்த்தி, எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் ஜி.ஞானதீபம், பாக முகவர் ஜி.பிரவீண்குமார், வட்டச் செயற்குழு உறுப்பினர் பி.பிரவீண்குமார் மற்றும் புஷ்பராஜ், பி.ரேகா, எம்.வினோத், ஆர்.வேலு, என்.சங்கீத் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.